சுருக்கம்

பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு பி.நவீன், த/பெ. காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு பெ.பிரசாத் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (பி1) துறை

அரசாணை (3ப) எண்.20

நாள் : 01.07.2021
பிலவ, ஆனி 17,
திருவள்ளுவர் ஆண்டு, 2052

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
3. தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம், திருச்சி கடிதம் எண். எஸ்1(2)/1618/2020, நாள் 07.12.2020.

------

ஆணை:–

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பொதுப்பணித் துறையைச் சார்ந்த உதவி செயற்பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, சரபங்கா வடிநில உபகோட்டம், நாமக்கல் அலுவலகத்தில் பணி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு பெ.பிரசாத் கடந்த 24.07.2017 அன்று பணியிலிருக்கும் போது காலமானதையடுத்து அவரது வாரிசுதாரர்/ மகனான திரு பி.நவீன் என்பவருக்கு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் தற்காலிக இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் திருச்சி மண்டல அலுவலகத்தில் பணியேற்று அப்பதவியில் 02.03.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும், பத்தாம் வகுப்பு தேர்வில் மார்ச் 2010–ல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், தனியரின் பிறந்த தேதி 02.12.1994 எனத் தெரிவித்து, தனியரின் பணியினை வரன்முறை செய்வதற்குத் தேவையான அனைத்து அசல் சான்றிதழ்கள் / சான்றாவணங்களை அனுப்பி வைத்து, தனியரின் பணியினை அவர் அப்பணியில் சேர்ந்த நாளான 02.03.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம், திருச்சி அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவது தொடர்பாக ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

4. தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், திரு பி.நவீன், இளநிலை உதவியாளர், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பொதுப்பணித் துறையில், கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்ட நாளான 02.03.2020 முற்பகல் முதல் அப்பதவிக்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் நாளிட்டு பணிவரன்முறை செய்வதால், தனியர் ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகைகளைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறை அ.சா.எண். 7961/ட்டி.1/2021–1, நாள்28.04.2021 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அ.சா.எண். 14043/ஜி1/2021, நாள் 11.05.2021–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம், திருச்சி–20.
திரு பி.நவீன், இளநிலை உதவியாளர்.
(தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம், திருச்சி–20 வழியாக)

நகல்:
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை–18.
தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறை / மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை– 9.
இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12/7/21
பிரிவு அலுவலர்

12-7-21

தொலைபேசிஎண்: 0431 - 2318622 மின்னஞ்சல்: kattidamtry@gmail.com

**தலைமைப் பொறியாளர் (கட்டடம்) பொ.ப.து., திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் செயல்முறை ஆணை.**

**பிறப்பிப்பவர் : திரு.லோ.ரவிச்சந்திரன், பி.இ.,**
தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொபது.,

---------------

**செயல்முறை ஆணை எண். எஸ்.1(2) / 1618 / 2020 / நாள் : 23 .07.2021.**

**பொருள்:** பணியமைப்பு - பொதுப்பணித்துறை - தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி - திரு.பி.நவீன், இளநிலை உதவியாளருக்கு (கருணை அடிப்படை) பணிவரன்முறை செய்து அரசால் ஆணை வெளியிடப்பட்டது - தகுதிகாண் பருவம் துவக்கி வைத்து ஆணை வழங்குவது- தொடர்பாக.

**பார்வை:**
1) முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., சென்னை அவர்களது செயல்முறை ஆணை எண்: எஸ்.3(4) / 38467 / 2019 / நாள்: 22.02.2020.
2) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்: எஸ்.1(2) / 1618 / 2020 / நாள் : 02.03.2020.
3) அரசு ஆணை (3ப) எண். 20, பொதுப்பணி (பி1)த்துறை / நாள் : 01.07.2021.

******

இம்மண்டல அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் திரு.பி.நவீன், இளநிலை உதவியாளர் பார்வை (1) மற்றும் (2)-ல் காணும் செயல்முறை ஆணைகளின்படி, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு, இளநிலை உதவியாளராக 02.03.2020 முற்பகல் பணியேற்று தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

பார்வை (3)-ல் காணும் அரசாணையின் மூலம் தனியருக்கு இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 02.03.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தனியர், இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட நாளான 02.03.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு 02.03.2020 முற்பகல் முதல் தகுதிகாண் பருவம் துவக்கி வைத்து ஆணை வழங்கப்படுகிறது.

..2..

1) இவர், இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 02.03.2020 முற்பகல் முதல் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்குட்பட்ட இரண்டாண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.
2) இவரது தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும்.
3) இவர் தகுதிகாண் பருவ காலத்தில் எவ்வித விடுப்பும் (தற்செயல் விடுப்பு மற்றும் மதசார்பு விடுப்பு நீங்கலாக) சென்றாலும் அதற்கேற்ப தகுதிகாண் பருவம் நீட்டிப்பு செய்து ஆணை பிறப்பிக்கப்படும் எனவும் ஆணை வழங்கப்படுகிறது.

29/7/2021

தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சார்பில், பொ.ப.து.,
திருச்சி மண்டலம், திருச்சி-20.

29/07/2021

**பெறுநர்:**

திரு.பி.நவீன்,
இளநிலை உதவியாளர், பொ.ப.து.,
தலைமைப் பொறியாளர் (கட்டடம்), அலுவலகம்,
திருச்சி மண்டலம், திருச்சி-20.